இதழ் -4

# Gospel Truth
# காஸ்பல் ட்ரூத்

**உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்**

For Private Circulation Only

## பெரிய சிலை- ராஜ்யபாரத்தைக் குறித்து தானியேலின் தீர்க்கதரிசனம்

சொப்பனம் இதுதான்; அதின் அர்த்தத்தையும் ராஜசமூகத்தில் தெரிவிப்போம் -தானி 2 :36. பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடம் **தானியேல்** தீர்க்கதரிசி இவ்வாறு தெரிவித்தார். இந்த **நேபுகாத்நேச்சார்**, ராஜ்யத்தின் மற்ற எல்லா ராஜாக்களைக் காட்டிலும் வல்லமையும், பராக்கிரமும் நிறைந்தவர். ராஜா ஒரு சொப்பனத்தைக் கண்டார்.அது அவருக்கு திகில் உண்டாக்கிற்று. படுக்கையின் மேல் உண்டான நினைவுகள் அவரைக் கலங்கப் பண்ணினது.பரலோகத்தின் தேவன் தானியேலுக்கு மறைபொருளை வெளிப்படுத்தினார்.

ராஜா சொப்பனத்திலே ஒரு பெரிய சிலை அவருக்கு எதிரே நிற்க கண்டார்.அந்த சிலையின் தலை பசும்பொன்னும் அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணு மாயிருந்தது. இவ்விதமாக வரப்போகிற நான்கு விதமான ராஜ்யங்களைக் குறித்ததான வெளிப்பாட்டை தானியேல் தீர்க்கதரிசி ராஜாவுக்கு அறிவித்தார்.

பொன்னான அந்தத் தலை, பாபிலோன் ராஜ்யத்தை ஆளுகை செய்யும் நேபுகாத் நேச்சாரைக் குறிக்கிறது. கி.மு.606 லிருந்து கி.மு 561 க்கு இடைப்பட்ட காலத்தில் அரசாண்ட **நிம்ரோத்** என்ற அசீரிய ராஜ்யத்தின் வாயிலாக தோன்றிய முதல் ராஜா இவர். சகல ராஜாக்களைக் காட்டிலும் மிகுந்த பராக்கிரமமும், வல்லமையும் நிறைந்தவர்.

பாபிலோனிய ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு எழும்பப் போகிற கீழ்த்தரமான வேறொரு ராஜ்யத்தைப் பற்றியதான மறைபொருளை முன்னதாகவே தானியேல் தீர்க்கதரிசி ராஜாவுக்கு தெரிவித்தார். கி.மு 538 ல் தானியேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மேதியனாகிய **தரியு** தன்




அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக் கட்டிக் கொண்டான் - தானி 5 :31. அந்த சிலையில் வெள்ளியிலான மார்பும், புயங்களும் வெளிப்படுத்திய மேதியரும், பெர்சியருமாகிய இவர்களுடைய ராஜ்யம் எழும்பிற்று.கிமு 330 ல் **மகா அலெக்சாண்டர்** என்றழைக்கப்பட்ட ஒரு பெர்சிய ராஜா இந்த உலகத்தை அரசாட்சி செய்தான்.


அந்த சிலையில் வெண்கலத்தினால் செய்யப்பட்ட வயிறும், தொடையும் வெளிப்படுத்திய கிரேக்க ராஜ்யம் இதுதான்.**மகா அலெக்ஸாண்டர்** மறைவுக்குப் பின் அந்த ராஜ்யம் நான்காக பிளவுபட்டது.பிறகு இந்த ராஜ்யம் சரியத் தொடங்கி வீழ்ச்சியடைந்தது. கிமு 146 ல் ரோமர்களின் ராஜ்யம் எழும்பிற்று.

அந்த சிலையில் இரும்பாலான கால்கள் வெளிப்படுத்தியது கடைசியாக எழும்பிய இந்த ரோம சாம்ராஜ்யம், அதன் பாதங்கள் பாதி இரும்பும், பாதி களிமண்ணு மாயிருந்தது என்பது எதைக் குறிக்கிறது எனில் இந்த ரோம ராஜ்யத்தின் பலவீனத்தைக் குறிக்கிறது. களிமண்ணோடே இரும்பு கலவாதது போல இந்த ராஜ்யம் பத்து சிறு துண்டுகளாக உடைபட்டது. இதன்பின்பு இந்த ராஜ்யத்தை ஆளுகை செய்யப்போகிறவர்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் ஏதுமில்லை.

ரோம அரசர் **சீசர் அகஸ்டஸ்** ஆட்சிகாலத்தில்தான் **இயேசுகிறிஸ்து** இந்த உலகத்தில் மனிதனாய் பிறந்தார்.தானியேலின் தீர்க்கதரிசனத்தின்படி அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். அந்த ராஜ்யம் என்றென்றைக்கும் நிற்கும் -தானி 2 : 44.நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்திலே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது.அது அந்தச் சிலையை இரும்பும்


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்ததான தீர்க்கதரிசனம் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா/ |
| --- | --- | --- | --- | --- |
| பக்கம் - 3 | பக்கம் - 4<br>தேவனுடைய ராஜ்யம்<br>பக்கம் - 5 & 6 | பக்கம் - 7 | பக்கம் - 8 & 9 | பக்கம் - 10 |

# வேதாகமம்



## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2தீமோ 3 : 16-17 ; 2பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

சபை- அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1கொரி 12 : 12-13 ; கொலோ 1:18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4 ;

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1கொரி 7 : 10, 11 ;

**வெளிப்புற தோற்றம்**

1தீமோ 2 : 9-10 ; 1கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**

2பேது 3 : 7-12 ; யோவா 5 : 28,29 ;
2கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2கொரி 3 : 17 ;

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15 ;

களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப் போட்டது.சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி, பூமியையெல்லாம் நிரப்பிற்று. இந்த தீர்க்கதரிசனமானது,அந்த ராஜாக்களின் நாட்களிலே வரப்போகிற ஆச்சரியமானதும் என்றும் நிலைத்து நிற்கும் இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தையே குறிக்கிறது.

நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்திலே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது.அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப் போட்டது.சிலையை மோதின கல்லோவென்றால்,ஒரு பெரிய பர்வதமாகி, பூமியையெல்லாம் நிரப்பிற்று.

வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர் – அப் 4 : 11 . ஏசாய தீர்க்கதரிசி முன்னறிவித்தபடியே கன்னிகையின் வயிற்றில் பிறந்த இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் தொடங்கிற்று.நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்.தாவீதின் சிங்காசனத்தையும், அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை – ஏசா 9 : 6,7.

4 விதமான ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ந்தது. ஆனால் அதே ராஜாக்களின் நாட்களிலே எழும்பிய இன்னொரு ராஜ்யம் என்றும் அழிக்கப்படவேயில்லை.அதுதான் பூமியிலுள்ள சகல ராஜ்யங்களிலும் மேலான இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம்.இது இந்த பூமிக்குரிய ராஜ்யமல்ல.ஆவிக்குரிய பரலோக ராஜ்யம்.என்றும் முடிவேயில்லாத ராஜ்யம்.இந்த சுவிசேஷம் பூமியின் சகல எல்லைகளிலும் பிரசங்கிக்கப்படும்.அரசாங்கங்கள் கிறிஸ்தவத்தை முறித்துப் போட முயன்றாலும்,தேவ ராஜ்யத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட்டுக்கொண்டேதான் இருக்கும்

தகுதியற்ற சில ஜனங்கள் பூமியிலே தேவனுடைய ராஜ்யத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.ஆனால் தேவராஜ்யம் இப்போதே இங்கு உள்ளதை உணராதிருக்கிறார்கள்.இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையிலே அது வெளிப்பட்டு விட்டது.ஆகவே நாம் இன்னொரு ராஜ்யத்தை எதிர்பார்க்கத் தேவையில்லை.இன்றே இரட்சணிய நாள்.மேலும் இந்த வேளையிலேதேவராஜ்யத்தின் மகிமைக்கேதுவாக ஆறுதலையும், சமாதானத்தையும் நாம் பெறுவோமாக.

## காஸ்பல் ட்ரூத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***E.mail*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர்: டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ரூத், 2/227 – கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# தலையங்கம்

“பயப்படாதே சிறுமந்தையே , உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்” (லூக் 12:32).

**காஸ்பல் ட்ரூத்** என்ற இந்த இதழில் கடந்த நாற்பத்துமூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பணிபுரிவதற்கு கர்த்தர் கொடுத்த கிருபைக்காய் முதலாவது அவருக்கு நன்றி சொல்லுகிறேன். கடந்த நாட்களில் என் வாழ்வில் துயரப் பள்ளத்தாக்கின் வழியாக நான் கடந்து வந்தேன்.அந்த வேளையிலே தேவாதி தேவன் எனக்கு பலத்தையும், மன வலிமையையும் தந்து இந்த ஊழியத்தைச் செய்ய கிருபை செய்தார். ஒரு மாதத்திற்கு முன்பு, கூடாத காரியம் என்று நினைத்த என்னுடைய சில சூழ்நிலைகளை தேவன் எனக்கு சாதகமாக்கி கொடுத்தார்.அது மாத்திரமல்ல எல்லா நேரத்திலும் தேவன் என்னோடிருக்கிறார்.பல நேரங்களில் தேவன் என் நண்பராக இருப்பதை எண்ணி அவருக்கு நன்றி செலுத்துவேன்.மேலும் மேலும் தேவன் அவருடைய அநாதி சிநேகத்தாலும், வல்லமையாலும் என்னை மூடுகிறார்.

சிலர் என்னிடம் சொல்வதுண்டு தேவனோடு பாடுபட முடியுமா ? அல்லது அவரில்லாமல் பாடுபட முடியுமா?.என் மீட்பராகிய இயேசுகிறிஸ்துவோடு பாடுபடும்படியாய் கர்த்தர் கொடுத்த பாக்கியத்திற்காக அவரைத் துதிக்கிறேன்.புயல் போன்ற சோதனைகளிலும் இயேசுகிறிஸ்துவின் கரங்களில் புகலிடமாய் உள்ள நமக்கு அதைவிட பெரிய பாதுகாப்பு வேறு யாருமில்லை.இதய பாரங்களும், நெருக்கங்களும் இவ்வாழ்வில் நமக்கு உண்டு.தேவ பிரசன்னமே பாரங்களையும், கவலைகளையும் மாற்றி தைரியத்தையும், பலத்தையும் நமக்கு தரவல்லது.**யோபு**வைப் போல நானும் **“என் மீட்பர் உயிரோடிருக்கிறார்”** என எண்ணி அவரைத் துதிப்பேன்.சாத்தானின் தூதன் என்னை சோதனைகளினால் புடமிடும்போது,அதிகமான ஆசீர்வாதங்களினாலும், அன்பினாலும் தேவதூதர்கள் என்னைச் சுற்றிலும் வெளிச்சமாயிருப்பார்கள்.தேவ குடும்பத்தில் நான் ஒருவனாக இருப்பது எனக்கு எத்தனை மேன்மையும் எத்தனை இன்பமுமாகும்.ஏனெனில் ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமக்கிறார்கள்.உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

தேவனுடைய ராஜ்யத்தில் நானும் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மகனாக இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.இந்த இதழில் தேவ ராஜ்யத்தைக் குறித்ததான சில சத்தியங்களை விவரித்துள்ளோம்.இடம் இல்லாத காரணத்தினால் தேவராஜ்யத்தின் முழுமையான சம்பூரணமான அழகை என்னால் விவரிக்க இயலவில்லை.பரிசுத்த ஆவியானவரே இந்த இதழில் உள்ள வார்த்தைகளை விரிவாக்கி வாசிப்பவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.பல மக்கள் இந்த பூமியிலே இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.அதன்பிறகே முழுமையான சமாதானம் வரப்போவதாக எண்ணுகிறார்கள்.நான் இப்போதே இங்கு இருக்கிறதான தேவராஜ்யத்தை அனுதினமும் அனுபவித்துக் கொண்டேயிருக்கிறேன்.வெளிப்புற மனிதனாகிய இந்த மாம்சம் அழிந்துபோகும்.ஆனால் உள்ளார்ந்த மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகின்றான்.அப்படியாக என்றென்றும் அழியாத ஆவிக்குரிய ராஜ்யத்தில் நானும் இருப்பதை எண்ணி மகிழ்கிறேன்.பெருங்காற்று மோதினாலும், தேவ ராஜ்யத்துக்கு எதிராக நரகத்தின் வாசல்கள் எழும்புவதில்லை.இந்த உலகத்தின் செல்வம் மற்றும் வளர்ச்சிக்காக நான் ஒருபோதும் தேவராஜ்யத்தின் பாக்கியத்தை விற்றுப்போட மாட்டேன்.

நம் இராஜாதி இராஜாவுக்கு, நம்பிக்கையுள்ளவர்களாகவும், உண்மையுள்ள வர்களாகவும், ஜீவிப்போம்.எல்லா புரிதல்களுக்கும் மேம்பட்ட இந்த உலகம் தரக்கூடாத ஒரு மெய்யான சமாதானம் அவரிடத்தில் உண்டு.தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களில் களிப்பதைப்போல,நித்திய பரலோக ராஜ்யத்தின் மகிமையை எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.

ஆன்லைனில்

அதிகமாக தெரிந்துகொள்ள

*www.thegospeltruth.org*



## இது முக்கியமா?

உனக்கு என்ன வேண்டும் என நீ நம்புகிறாய்? எனக்கு என்ன வேண்டும் என நான் விசுவாசிக்கிறேன்? நாம் அனைவரும் ஒரே இடத்தையும், ஒரே கோட்பாட்டையுமே தலையாயக் கடமையாகக் கொண்டுள்ளோம்.ஆனால் அதில் நாம் உண்மையாக இல்லை. ஆகவே பாரம்பரிய, மத ரீதியான கிறிஸ்தவர்களாகவே நாம் உள்ளோம் எனலாம்.

இது ஒரு தவறான முடிவாக இருக்கிறது.சபையின் கருத்துக்கள் மற்றும் இறையியல் தத்துவங்களை பொருட்படுத்தாமல், வேதத்தில் ஒரு சத்தியம் உள்ளது.

ஆவிக்குரிய ராஜ்யமான தேவராஜ்யத்தின் மெய்யான கோட்பாடு முக்கியம்.சரியான புரிதலுடன் மக்கள் இன்று தங்கள் வாழ்வில் உண்மையைத் தேடிக் கொள்ளலாம்.மாறாக எதிர்காலத்தில் தேவராஜ்யம் வருமென்று தேட வேண்டாம்

பாவிகள் மனந்திரும்ப இன்றே ஏற்ற சமயம்.வேறு எந்தவிதமான சந்தர்ப்பமும் உங்களுக்குக் கிடையாது.தேவனோடு சமாதானம் செய்து ஒப்புரவாகிக் கொள்ள மறுசந்தர்ப்பம் உங்களுக்குக் கொடுக்கப்பட மாட்டாது.

**"இன்றே இரட்சணிய நாள்"**

இதுதான் முக்கியம்

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : தேவனுடைய ராஜ்யம்

### வேத வாசிப்பு

லூக்கா 1 : 31-33 – இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்.அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக.அவர் பெரியவராயிருப்பார். உன்னதமான வருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்;அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.

### ஆலோசனை

தேவனுடைய ராஜ்யம் இந்த உலகத்திற்குரியதல்ல.ஆவிக்குரிய தேவ ராஜ்யமானது இயேசுகிறிஸ்துவின் மூலமாக நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்க வேண்டும்

### I.தேவராஜ்யத்தின் இருப்பிடம்

**A.**யோவான் 18 : 36-37 – என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல

**B.**லூக் 17 : 20-21 – இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே

### II.தேவராஜ்யம் ஆவிக்குரியது

**A.**ரோமர் 14 :17 – தேவனுடைய ராஜ்யம் நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது

**B.**1 கொரி 4 :20 – தேவனுடைய ராஜ்யம் பெலத்திலே உண்டாயிருக்கிறது

### III.ஏற்படுத்தப்பட்ட காலம்

**A.**லூக் 16 : 16 – நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது;அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது

**B.**லூக் 4 :43 – நான் (இயேசு) தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்க வேண்டும்.

**C.**மாற்கு 1 :14-15 – காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று

**D.**மாற்கு 9 : 1 – தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை.

**E.**அப்போ 1 : 1-3 – இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்கு பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்டபின்பு தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்.

### IV.தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசித்தல்

**A.** யோவா 3 : 3 – ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்.

**B.** லூக் 16 : 16 – தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள்.

### V.தேவ ராஜ்யத்தின் ஆளுகை

**A.** வெளி 1: 5, 6– தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினவர் அவர்.

**B.** 1 பேதுரு 2 : 9, 10 – தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள்.

**C.** ரோமர் 6 : 14, 15– பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.

**D.** 1 யோவா 5 : 4 – உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

**E.** வெளி 15 : 2, 3 – சொரூபத்திற்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயம் கொண்டவர்கள்.

**F.** லூக் 10 : 17 – 20 – சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்.

### VI.தேவ ராஜ்யம் எற்கனவே அமைக்கப்பட்டதற்கான ஆதாரம்

**A.** எபிரே 12 : 28 – அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம்.

**B.** கொலோ 1: 12, 13 – தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறேன்.

**C.** வெளி 1; 9 – அவருடைய ராஜ்யத்திற்கு உடன் பங்காளனுமாயிருக்கிற யோவான்.

### VII.தேவ ராஜ்யத்தின் அரசாட்சி காலம்

**A.**ஏசாயா 9 : 6, 7 – அவருடைய ராஜ்யத்தை அவர் திடப்படுத்தி...

**B.**தானி 2 : 44 – பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்.

### சவால்

லூக் 12 : 31 , 32 – தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட்டிக் கொடுக்கப்படும்.

பயப்படாதே சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்.

# தேவனுடைய ராஜ்யம்

## ஒருநோக்கு வேதாகம செய்தி

**யூதர்களின் அரசியல் விடுதலை முயற்சி**

யூத ஜனங்கள், ரோமர்களின் அரசாட்சியின் கீழ் இருக்கும் நாட்களில் தங்களை மீட்டெடுக்க வரப்போகிற மேசியாவின் வருகையையும் அவருடைய ராஜ்யத்தையும் எதிர் நோக்கி காத்திருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் முன்னரே உரைத்தப்படி அழிவில்லா பிதாவாகிய இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்தின் என்றென்றும் நிலைத்து நிற்கும் சமாதானம், சுகம், விடுதலை இவற்றிற்காக காத்து கொண்டிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் சீஷர்களும் கூட பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும் முன்பதாக இயேசு கிறிஸ்துவிடம் இவ்வாறு கேட்டனர். ஆண்டவரே இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் – அப் 1 : 6 .

இந்த யூத மக்கள் தங்களில் ஒருவரான இயேசு கிறிஸ்துவை பிதாவினுடைய குமாரனாக ஏற்றுக்கொள்ளாமல், வரப்போகும் **மேசியா** ராஜ்யத்தை இஸ்ரேலுக்கு திரும்பக் கொடுப்பார் என எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களும் பெயர் கிறிஸ்தவர்களாய் வாழ்கிறவர்களும், மேசியா வருகை நாட்களில் இந்த பூமியிலே அவருடைய ராஜ்யத்தை நிலைப்படுத்துவார் என்கிறார்கள். அந்த நாள் ஒருபோதும் வராது. தேவனுடைய வார்த்தை நமக்கு தெளிவாக விவரிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின் போதே தேவனுடைய ராஜ்யம் நமக்குள் வந்து விட்டது. இப்போதே இருக்கிற இந்த ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளாமல் தங்கள் சந்தோஷத்தை இழந்து கொண்டிருக்கிறார்கள்.



**காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்- மாற்கு 1 :15**

**தேவனுடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குறியதல்ல.**

ஜனங்களெல்லாரும் மேசியாவின் வருகைக்காகவும் இவ்வுலகத்தின் அவருடைய ராஜ்யத்திற்காகவும் காத்திருக்கிறார்கள், என்று இயேசு கிறிஸ்து அறிந்து, தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பதாகவே **பிலாத்து**விடம் என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குறியதல்ல என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியர்காரர் போராடியிருப்பார்களே– யோவான் 18 : 36.

தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று பரிசேயர் அவரிடத்தில் கேட்ட பொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது என்றார்– லூக் 17 : 20, 21. இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யத்தை காணுமுன் மரணத்தை ருசிப்பார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.

**தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரியது**

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும்,குடிப்புமல்ல,அது நீதியும், சமாதானமும், பரிசுத்தஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாய் இருக்கிறது – ரோமர் 14 : 17 . மெய்யான சமாதானம் என்பது ஆளுகையிலோ, சூழ்நிலைகளினாலோ உண்டாவதில்லை.தேவனாகிய இயேசுகிறிஸ்து நம் இருதயத்தில் தருவதே மெய்யான சமாதானம்.என் சமாதானத்தையே உங்களுக்கு வைத்துப் போகிறேன்.என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் – யோவான் 17 : 27.

**தேவ ராஜ்யம் இயேசுகிறிஸ்துவால் உண்டானது**

மனந்திரும்புங்கள்.தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து **யோவான் ஸ்நானகன்** சுவிசேஷமாய் அறிவித்து வந்தார்.நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது.அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது.யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள் – லூக் 16 : 16.

காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்– மாற்கு 1 :15. தேவனுடைய ராஜ்யம் இனி வரப்போவதில்லை.அது ஏற்கனவே இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்குள் இருக்கிறது.என்னுடைய ராஜ்யத்தைக் காணுமுன், உங்களில் சிலர் தங்களுடைய மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்

**தேவராஜ்யத்திற்குள் எப்படி பிரவேசிக்கலாம்**

ஒருவன் மறுபடி பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று இயேசு **நிக்கோதேமு**க்கு கூறினார்–யோவான் 3 : 3. ஒருவன் பாவத்தினின்று மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால் மாத்திரமே தேவராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும்

பெந்தேகோஸ்தே என்னும் நாள் வந்தபோது பரிசுத்தஆவியின் வல்லமையினால், சீஷர்கள் நிரப்பப்பட்டது தேவ ராஜ்யத்தின் மகிமையைக் காட்டுகிறது – அப்போஸ்தலர் : 2. தேவராஜ்யத்தின் பரிபூரணமானது ஆவிக்குரிய வரங்களாகிய வல்லமை, சமாதானம்,சந்தோசம்,தேவ வழிநடத்துதல் மற்றும் பரிசுத்தத்தை நிறைவாக்குகிறது.

**தேவராஜ்யத்தின் அரசாட்சி**

தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக – வெளி 1 : 6.அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்.எல்லாவற்றிலும் முதலாயிருக்கும்படி, அவரே ஆதியும், மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் – கொலோ 1 : 18. இயேசுகிறிஸ்துவே நம்மை சுகமடையவும்,விடுதலையடையவும், பரிசுத்தமுள்ளவர்களாக்கவும் வல்லவர்

**தேவராஜ்யம் எல்லோருக்குமுரியது**

எபி 12 : 28– இயேசுகிறிஸ்துவின் மூலமாக பெறப்பட்ட தேவராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும், தேவனுக்குப் பிரியமாய்

ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றியதான தீர்க்கதரிசனமானது ஏசாயா தீர்க்கதரிசியினால் முன்னறிவிக்கப்பட்டு இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையில் நிறைவேறியது.தேவராஜ்யத்திற்கும் அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் முடிவில்லை – ஏசா 9:6–7.



**குறிப்பு**

கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்.பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போம். நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் – 2 பேதுரு 3 : 10–12. நீதியுள்ளவர்கள் பரலோகத்திலும், அநீதியுள்ளவர்களெல்லாரும் நரகத்திலேயும் தள்ளப்படுவார்கள்.இதைக் குறித்த விரிவான விளக்கத்தை அடுத்த இதழில் காணலாம்.

## ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பது மற்றும் அதற்கான அவசியங்கள்

**1902 ல் H.M.ரிகில் எழுதியவற்றிலிருந்து சில விளக்கங்கள்**



**1.ஆளுகையின் தலைவரே ராஜா**

மத் 21 : 4–5 – இதோ உன் ராஜா.

கொலோ 1 : 18 – அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

**2.ராஜாவின் சிங்காசனம்**

எபி 1 : 8 – குமாரனை நோக்கி : தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது.உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது.

எபி 4 : 16 – நாம் இரக்கத்தைப் பெறவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**3.சகல அதிகாரமும் நிறைந்தவர்**

மத் 28 : 18 – வானத்திலும்,பூமியிலும் சகல அதிகாரங்களும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**4.அவருடைய அரசாட்சிக்குக் கீழ்ப்பட்டவைகள்**

யாக் 4 : 7 – தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள். அவரிடத்தில் சேருங்கள். 1 பேதுரு 3 : 22 – அவர் பரலோகத்திற்குப் போய் தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

**5.ஆளுகையின் பிரமாணங்களாகிய சட்டதிட்டம்**

எபி 8 :10 –என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் எழுதுவேன். நான் அவர்கள் தேவனாயிருப்பேன். ஆகவே தேவனுடைய ராஜ்யம் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு விட்டது.

**முடிவுரை**

தேவனுடைய அரசாட்சியில் இவை அனைத்தும் நிறைந்திருக்கிறது.ஜனங்களின் இருதயத்திலே வாசம் செய்யும் இயேசுகிறிஸ்துவே பரலோகத்துக்கும், பூலோகத்துக்கும் ராஜாதி ராஜா.அவரே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர்.தம்முடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்.இயேசுகிறிஸ்துதான் பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் ராஜாதி ராஜாவாக என்றென்றும் வீற்றிருப்பவர்.பரிசுத்தவான்களுடைய ஆளுகை தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடாகும்.இவ்வாறாக தேவராஜ்யம் ஏற்கனவே ஆயத்தம் பண்ணப்பட்டு உள்ளது.

# தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்ததான தீர்க்கதரிசனமும் அதன் நிறைவேறுதலும்

| தீர்க்கதரிசனம் | நிறைவேறுதல் |
|---|---|
| ஏசாயா 2 : 2-4 ; மீகா 4 : 1-7 – கர்த்தருடைய ஆலயமாகிய சீயோன் மலையிலே பர்வதம் ஸ்தாபிக்கப்பட்டு | எபி 12 : 22-23 – நீங்கள் சீயோன் மலையினிடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள் |
| சங் 2 : 6-9 – என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணி வைத்தேன்<br>சங் 110 : 1-3 – கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார். | அப் 13 : 33 – இயேசுவை எழுப்பினதாலே<br>அப் 2 : 30, 32-36 – சிங்காசனத்தில் வீற்றிருக்க கிறிஸ்துவை எழும்பப் பண்ணுவார் |
| தானி 7 : 14 – அவருக்குக் கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. | எபேசி 1 : 20-22 – எல்லா வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கிறார் |
| ஏசாயா 35 : 5-6 – குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம் | மத் 4 : 23-24 ; 8 : 16-17 – சகல நோய்களையும் நீக்கி சொஸ்தமாக்கினார் |
| ஏசாயா 35 : 6-7 – வெட்டாந்தரை தண்ணீர்த் தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்.<br>மீகா 4 : 3-4 – பயப்படுத்துவார் இல்லாமல் உட்காருவான் | யோவான் 4 : 14 – நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.<br>யோவான் 6 : 35 – என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.<br>யோவான் 14 : 27 – என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் |



**நீங்களோ**
**சீயோன் மலையினிடத்திற்கும்**
**ஜீவனுள்ள தேவனுடைய**
**நகரமாகிய பரம**
**எருசலேமினிடத்திற்கும்**
**வந்து சேர்ந்தீர்கள்**

# கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி :** ஏசாயா 11 ஆம் அதிகாரத்தில் காட்டுமிருகங்கள் ஒருமித்து படுத்துக்கொள்ளும் என்று கூறப்பட்டுள்ள வேத வசனம் எதைக் குறிக்கிறது?

**பதில் :** இதற்கான விளக்கத்தை கீழே காண்போம். அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும். கன்றுக்குட்டியும், பாலசிங்கமும் ஒருமித்திருக்கும்; ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான். பசுவும், கரடியும் கூடிமேயும். அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும். சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங்குழந்தை விரியன்பாம்பு வளையின் மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும் – ஏசா 11 : 6-8.

இது ஒரு முக்கியமான கேள்வி அதாவது ஆயிரம் ஆண்டு அரசாட்சியில், பூமியிலே அமைக்கப்படப்போகிற தேவனுடைய ராஜ்யத்தில் சிங்கமும், ஆட்டுக்குட்டியும் ஒன்றாக படுத்துக்கொள்ளும். ஏசாயா 11 ல் கூறப்பட்டுள்ள இந்த வேத வசனத்திற்கு மேற்குறிப்பிடப்பட்ட விளக்கம் சரியானதல்ல. ஜனங்களெல்லாரும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருநாள் வரும் அப்போது இந்த பூமியிலே மிகுந்த சமாதானம் உண்டாகும். மிருகங்களும் ஒருமித்து படுத்துக்கொள்ளும் என்று கவர்ச்சியான வார்த்தைகளால் பூமியிலே வரப்போகிற அந்த மகிமையின் ராஜ்யத்தை விவரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து கூறினார். அது பூமிக்குரியதல்ல. இயேசுகிறிஸ்துவின் மூலமாக நமக்கு கிடைக்கும் இரட்சிப்பையும், சமாதானத்தையும் குறித்ததான தீர்க்கதரிசனத்தைத்தான் ஏசாயா 11 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மிருகங்களும், மிருகங்களைக் குறிக்கவில்லை. மாறாக அந்த மிருகங்களைப் போல குணாதிசயம் உள்ள மனிதர்களையே குறிக்கிறது. இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறப்போகிற நாட்களுக்காக நாம் காத்திருக்க வேண்டியதில்லை. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின் மூலம் அது ஏற்கனவே நிறைவேறி விட்டது.

இதை வெளிப்படுத்தும் மேலும் சில வசனங்களையும் காண்போம். ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் – ஏசா 11 : 1. ஈசாயின் வழி வந்த தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைத் தவிர வேறு யாருமில்லை என்பதே இந்த வசனத்தின் பொருள். அக்காலத்திலே ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள். அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும் – ஏசா 11 : 10. மேலும் எரே 23 : 5 ; வெளி 5 : 5 லிருந்து அவர் யூதா கோத்திரத்துச் சிங்கமும்,



குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மிருகங்களும், மிருகங்களைக் குறிக்கவில்லை. மாறாக அந்த மிருகங்களைப் போல குணாதிசயம் உள்ள மனிதர்களையே குறிக்கிறது.

தாவீதின் வேருமானவர் . அவர் ஜெயங் கொண்டிருக்கிறார்.

அப்போஸ்தலராகிய பவுல் ஏசாயா 11 ல் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலைப் பற்றி கீழே குறிப்பிட்டுள்ள வசனங்களின் வாயிலாக தெளிவுபடுத்துகிறார்.

பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும் படிக்கு, தேவனுடைய சத்தியத்தினிமித்தம் இயேசுகிறிஸ்து விருத்தசேதன முள்ளவர்களுக்கு ஊழியக்காரரா னாரென்றும், புறஜாதியாரும் இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன்.

அந்தபடி இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மைஅறிக்கை பண்ணி, உம்முடையநாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது. புறஜாதிகளே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள். ஜனங்களே எல்லாரும் அவரைப் புகழுங்கள் என்றும் சொல்லுகிறார். ஈசாயின் வேரும், புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார். அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கை வைப்பார்கள் என்று ஏசாயா சொல்லுகிறார் – ரோமர் 15 : 8-13.

**பவுல்** ரோமாபுரியருக்கு எழுதும்போது, யூதரல்லாத உங்கள் சகோதரர்களை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் அவர்களும் தேவனுடைய ராஜ்யத்தை பரிசுத்த ஆவியின் மூலம் பெற்றிருக்கிறார்கள் என வலியுறுத்துகிறார். இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். அவருடைய மரணத்தின் வாயிலாகவும், உயிர்த்தெழுதலின் மூலமாகவும் எல்லா மனிதருக்கும் தேவராஜ்யத்தைச் சுதந்தரமாக கொடுத்தார்.

கர்த்தர் யூதருக்கு மட்டும் ராஜாவல்ல. யூதரல்லாத மற்ற புறஜாதியாராகிய அனைவருக்கும் அவர் கர்த்தரே. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய நமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி,

அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார் – யோவா 1 : 11 -12 . அவருடைய தாபரஸ்தலத்தின் மகிமையைக் குறித்து ஏசாயா 11 : 10 ல் விசுவாசிகளுக்கு மாதிரியாக இயேசு கிறிஸ்துவின் காலத்தில் முன் சொல்லப்பட்டது.

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் – மத் 11 : 28. அந்த தீர்க்கதரிசனத்தில் சுட்டிக்காட்டப்பட்ட இளைப்பாறுதலும், சமாதானமும் கிறிஸ்துவே இந்த பூமிக்குத் தந்தார். பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி மேசியாவின் பிறப்பைக் குறித்து சொல்லிய வார்த்தைகளில் என்னே ஆச்சரியம்! உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே

சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக – லூக் 2 : 14. இவ்வாறான வேத வசனங்களின் வாயிலாக சொல்லப்பட்ட கேள்விக்கான பதிலைக் காணலாம். நாம் தெரிந்து கொண்டது என்னவெனில் வரப்போகிற எதிர்காலத்தை நோக்காமல், கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் கவனத்தில் கொண்டு, காட்டு மிருகங்கள் எல்லாம் கூடி மேயும் என்ற வசனத்தை தியானிக்க வேண்டும்.

மிருகங்களின் ராஜ்யத்திலே இப்பொழுது வரை அப்படி நடைபெறவில்லை என்பதை முதலாவது தெளிவாக புரிந்து கொள்ளக் கடவோம். மேலும் நாம் நினைவுகூர வேண்டியது தேவராஜ்யம் ஆவிக்குரியது. சமாதானமும், இளைப்பாறுதலும் தேவபிள்ளைகளிடையே என்றென்றும் நிலைத்திருக்கிறது.

ஆகவே நாம் ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றி புரிந்து கொள்ள உள்ளோம். தீர்க்கதரிசனம் என்பது எப்போதும் ஒரு அடையாளத்தை வைத்தே சொல்லப்படும். அதையேதான் நாம் ஏசாயா 11 லும் காண்கிறோம். அங்கே கூறப்பட்டுள்ள மிருகங்கள் உண்மையான மிருகங்களைக் குறிப்பதில்லை. மாறாக அப்படிப்பட்டதான குணாதிசயங்களைக் கொண்ட மனிதர்களைத்தான் அது குறிக்கிறது. இது பழைய ஏற்பாட்டில் மாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டிலும் கூட இதுபோன்ற முறைமைகளில் தான் குறிப்பிடப்படும்.

**எசேக்கியேல்** தீர்க்கதரிசி உரைக்கிறதாவது, அதின் நடுவில் இருக்கிற அதின் பிரபுக்கள் இரை கவ்வுகிற ஓநாய்களைப் போல் இருக்கிறார்கள். அநியாயமாய் பொருள் சம்பாதிக்கிறதற்கு இரத்தஞ் சிந்துகிறார்கள் – எசே 22 : 27. இயேசுகிறிஸ்து தம் சீஷர்களிடம் புறப்பட்டு போங்கள்; ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ நான் உங்களை அனுப்புகிறேன் – லூக் 10 : 3. நீங்கள் போய் அந்த நரிக்குச் சொல்லுங்கள்– லூக் 13 : 32. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள மிருகங்கள் குறிப்பது யாதெனில் அதற்கு ஒப்பான குணங்களைக் கொண்ட மனிதர்களையே. ஓநாய்கள் குறிப்பது, மற்றவர்களை அழிக்கும் குணம் கொண்ட மனிதர்கள். ஆட்டுக்குட்டி குறிப்பது மனத்தாழ்மையும், சாந்த முள்ளவர்கள். நரி தந்திரமான மனிதர்களைக் காட்டுகிறது. ஆகவே ஏசாயா 11 : 6-8 வசனங்களில் குறிப்பிடப்படுவது



**இயற்கையாக விலங்குகள் அனைத்தும் எதிரி என்று பாராமல் தங்களுக்குள்ளே சமாதானத்தோடே படுத்துக்கொள்ளும்.**

யாதெனில், இயற்கையாக விலங்குகள் அனைத்தும் எதிரி என்று பாராமல் தங்களுக்குள்ளே சமாதானத்தோடே படுத்துக்கொள்ளும். இதைப் போலவே தான் மாறுபட்ட குணநலன்கள், தனித்தன்மைகள் கொண்ட ஜனங்களாகிய நாம் அனைவரும் சமாதானத்துடன் இசைந்து வாழ வேண்டும் என்பதையே இத்தீர்க்கதரிசனம் வெளிப்படுத்துகிறது. பாதுகாப்பற்ற முறையில் வாழும் ஜனங்களும் ஒருவரோடொருவர் இணக்கத்துடன் வாழ பழக வேண்டும். பலமுள்ளவைகளோ, பலனற்றவைகளோ, வனாந்தரமோ, செழிப்பானதோ, தீங்கு விளைவிப்பதோ, தீங்கு விளைவிக்காததோ இவை யாவும்ஒன்றோடொன்று சேர்ந்து இருக்கும். இது சாத்தியமாகுமா என்றால் இங்கே சாத்தியமில்லை.

ஆனால் தேவராஜ்யத்திலே அது சாத்தியம். இதுதான் தேவராஜ்யத்தின் உண்மையான நிலைப்பாடு. உலக மெங்குமுள்ள சகல சிருஷ்டிகளும், பாஷைக்காரரும், மொழியினரும் எந்தவிதமான பாகுபாடுமின்றி **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து**வின் மூலமாய் தேவராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும். ஏனெனில் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின – 2 கொரி 5 : 17.

இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது –2 பேது 1 : 4. விரோதங்கள், மூர்க்கங்கள், மாம்ச இச்சைகள் முதலாகிய இப்படிப்பட்ட பழைய குணாதிசயங்கள் நம்மைவிட்டு ஒழிந்து போய் அன்பும், சமாதானமுமாகிய புதிய நற்பண்புகள் நம்மில் குடிகொள்ளும். தேவனுடைய ராஜ்யம் எத்தனை இன்பமானது. இன்றே நம்மை ஆளுகை செய்கிற தேவராஜ்யத்தைக் குறித்ததான ஏசாயா 11 : 6-8 வசனங்கள் நமக்கு தெளிவுபடுத்துகிறது

ஆவிக்குரிய இந்த தேவராஜ்யத்தின் சமாதானத்தையும், ஆசீர்வாதங்களையும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நம்முடைய வாழ்விலே அனுபவித்துக் கொண்டிருக்கிற நாம் தேவனோடு பரலோக வாழ்வைப் பெறப்போவதை எதிர்நோக்கி காத்திருப்போமாக!

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION



உங்களுக்குத் தெரியுமா?

**வேதவாக்கியம் :** தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள் – ஆதி 6 : 2.

**காலம் :** நோவாவின் காலத்தில் தேவன் பூமியை அழிப்பதற்கு முன்.



**தேவகுமாரர் :** சேத்தும் அவனுக்கு பின் வந்த சந்ததியாரும், கர்த்தராகிய தேவனை நல்லொழுக்க குணத்தோடு சேவித்து தங்களை காத்துக் கொண்டார்கள்.

**மனுஷகுமாரத்திகள் :** காயினும் அவனுக்கு பின் சந்ததியாரும் தேவனைவிட்டு விலகி, மாம்சத்திற்கேற்றவர்களானார்கள்.

**முடிவு :** தேவ பக்தியுள்ள ஒருவன் தேவ பக்தியற்ற ஒருவரை திருமணம் செய்தால், அவருடைய ஆவிக்குரிய வாழ்வில் சரிவு உண்டாகும்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

# நான் இருளிலே உட்கார்ந்திருந்தால்

**... நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்- மீகா 7 : 8**

வாழ்வின் இருளான நேரத்திலே நம் தேவாதி தேவன் இருளை தம் அன்பினாலும், சத்தியத்தினாலும் வெளிச்சமாக்குவார். பெலவீன நாட்களிலும், மன வேதனை நிறைந்த நேரத்திலும், இதயத்தின் பாரத்திலும் தேவனாகிய **இயேசு கிறிஸ்து**வின் மகிமையுள்ள பிரசன்னம் நம்மை சூழ்ந்து கொண்டு, எல்லா பாரங்களையும் நம்மை விட்டு நீக்கி நன்மையை தர வல்லவர். சில வேளைகள் உங்கள் வாழ்வில் இருளாகத் தோன்றும்,



அது நம்மை விட்டு விலகாதவாறு தோன்றும், எதிர் காலமும் சில வேளைகளில் நமக்கு இருளாகவும், நிச்சயமற்ற தன்மையையும் கொண்டதாக காணப்படும். அப்படிப்பட்டதான சூழ்நிலைகளில் தேவன் தரும் வெளிச்சத்தின் இளைப்பாறுதல் நமக்கு சமாதானத்தைத் தரும். வரும் நாட்களை எதிர்கொள்ளத் தேவையான தைரியத்தையும், மன வலிமையையும் தேவனுடைய வெளிச்சம் நமக்கு தரும்.

நாம் அவரை ஏற்றுக் கொள்ளும் போது நித்திய அன்பையும், வெளிச்சத்தையும் நம் வாழ்வில் தர அவர் வாஞ்சையாயிருக்கிறார். இந்த உலகம் இருளாயும், இருளுக்குள்ளே கடந்து செல்கிறதாயும் உள்ளது, ஆனால் தேவனுடைய சத்திய வசனங்கள் வெளிச்சத்தின் பிரசன்னத்தையும் கொண்டு வந்து இருளை நம்மை விட்டு விலகச் செய்யும்.

உலகமே இருளாக தோன்றும் போது, உங்கள் சொந்த வாழ்க்கையின் பிரச்சனைகள் இருள் போல் சூழ்ந்து நின்றாலும், நம்பிக்கை இழந்த விரக்தியான வேளைகளிலும், தேவனாகிய இயேசு கிறிஸ்து நமக்கு பலத்த நம்பிக்கையை தர வல்லவர். இருளான நம் சூழ்நிலைகள் வெகு நாட்கள் நம்மை சூழ்ந்திருப்பதில்லை. ஏனெனில் நம் இரட்சகரும், தோழருமாகிய இயேசு கிறிஸ்துவின் வெளிச்சம் நம் பாரமான இதயத்தில் மகிழ்ச்சியின் சந்தோஷத்தைப் பெற்றுத் தரும்.

**தொடர்புக்கு:-**

ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி - வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
2/227 - Kolarpatti
Pollachi -Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha,2/227 Kolarpatti, Pollachi -Tk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316